(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

தரம் 5

# இரண்டாம் தவணை இறுதிக் கணிப்பீடு - 2023

புள்ளி

## தமிழ் மொழி

சுட்டெண் : ..............................

நேரம் : 1:00 மணித்தியாலம்

01. பின்வரும் பந்தியை வாசித்துக் கேட்கப்படும் வினாக்களுக்குரிய விடையினைப் பந்தியிலிருந்து தெரிந்த எழுதுக.

ஊறணி சரஸ்வதி வித்தியாலயத்தின் காலை ஆராதனை நிகழ்வில் உடற்கல்வி ஆசிரியரின் நீண்ட நேர நட்சிந்தனையின் போது தரம் 5 மாணவியான அமுதகுமுதமாலினி மயக்கமுற்று கீழே விழுந்ததும் வகுப்பாசிரியர் மூலம் அழைத்துச் செல்லப்பட்டார். மாணவர்கள் மயக்கமடைதல், தலைவலி, வயிற்றுவலி, சோர்வு போன்ற நோய்களுக்கு உட்படுகின்றனர். மாணவர்களுக்கு ஏற்படும் இந் நோய்களுக்கான காரணம் முறையான மற்றும் போசாக்கான உணவு முறை இன்மையென வைத்தியச் சான்று கூறுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் அனைத்து ஆரம்பப்பிரிவு பாடசாலைகளுக்கும் போசாக்குணவு வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

1) அனைத்து ஆரம்பப்பிரிவு பாடசாலைகளுக்கும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுவரும் திட்டம் என்ன? : ..............................

2) காலை ஆராதனையின் போது மயக்கமடைந்த மாணவி யார்? : ..............................

3) குறுகிய என்ற சொல்லின் எதிர்க் கருத்தைப் பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக. : ..............................

4) மாணவர்கள் எவ்வாறான நோய்களுக்கு உட்படுகின்றனர் என வைத்தியச் சான்று கூறுகின்றது? : ..............................

5) மாணவர்களுக்கு ஏற்படும் நோய்களுக்கான காரணம் எவையென பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன? : ..............................

6) காலை ஆராதனையின் போது நட்சிந்தனை யாரால் நிகழ்த்தப்பட்டது? : ..............................

($6 \times 2 = 12$ புள்ளிகள்

02. பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுங்கள்.

1) காட்சிப்படங்களைத் தொடவேண்டாம் என்று கூறினார்

2) திங்கட்கிழமை வாரத்தின் முதல் நாளாகும்

3) மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்

($3 \times 2 = 06$ புள்ளிகள



kalvi.lk

03. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலை என்பவற்றின் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குள் அடையாளமிடுக.

1) எனது அண்ணா உரத்துப் புத்தகம் வாசிப்பேன். ( )

2) தோட்டத்திலுள்ள ஒவ்வொரு பூவும் அழகானவை. ( )

3) பசுக் கூட்டம் வயலினுள் சென்றது. ( )

4) வைத்தியர் உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். ( )

5) அலுமாரியில் புத்தகம் அடுக்கப்பட்டிருந்தன. ( )

(5 × 2 = 10 புள்ளிகள்)

04. பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.

| | | | | |
|---|---|---|---|---|
| நான் | அலுமாரி | பெரியம்மா | பந்துகள் | பிள்ளைகள் |

1) உயர்திணைப் பன்மை படர்க்கைப் பெயர்ச்சொல் : ..............................

2) உயர்திணைப் ஒருமை தன்மை பெயர்ச்சொல் : ..............................

3) அஃறிணை பன்மை பெயர்ச்சொல் : ..............................

4) உயர்திணை படர்க்கைப் பெண்பால் பெயர்ச்சொல் : ..............................

5) அஃறினை ஒருமை பெயர்ச்சொல் : ..............................

(5 × 2 = 10 புள்ளிகள்)

05. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1) ஆத்திசூடியானது / மிக / இனிமையாகவும் / கற்பதற்கு / இருக்கிறது / எளிமையாகவும்

..................................................................................................................................

..................................................................................................................................

2) வைத்திருங்கள் / சுத்தமாக / வீடுகளில் / நீர்தேங்கி / இடங்களைச் / நிற்கும்

..................................................................................................................................

..................................................................................................................................

3) நல்ல / நித்திரை / பழக்கம் / ஆகும் / விட்டெழுவது / அதிகாலையில்

..................................................................................................................................

..................................................................................................................................

4) வீரர்களின் / மைதானத்தில் / இடம்பெற்றது / அணிவகுப்பு

..................................................................................................................................

5) சுதந்திர / நான்காம் / இலங்கையின் / தினம் / பெப்ரவரி / திகதி / கொண்டாடப்படுகின்றது

..................................................................................................................................

..................................................................................................................................

(5 × 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரும் வெளிப்படுத்தும் கருத்தை கட்டத்திற்குள் இருந்து தெரிவு செய்து கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | |
|---|---|
| ஆபத்தில் கைவிடல் | சிதறாத கவத்துடன் இருத்தல் |
| வெற்றியடைதல் | குற்றத்தை மறைத்தல் |

1) பூசி மெழுகுதல் : ..............................

2) நட்டாற்றில் விடல் : ..............................

3) வாகை சூடல் : ..............................

(3 × 2 = 06 புள்ளிகள்)

பின்வரும் இணைமொழிகளில் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| உற்றார் உறவினர் | வரவு செலவு | சீரும் சிறப்பும் | ஓடி ஆடி |

1) பெண்கள் வயலில் .............................. வேலை செய்தனர்.

2) திருமண நிகழ்விற்கு .............................. வருகை தந்தனர்.

3) முதலாளி தைமாத இறுதியில் .............................. விபரங்களைக் கணக்கிட்டார்.

(3 × 2 = 06 புள்ளிகள்)

பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) விடாது முயற்சி செய்தால் பலன் கிடைக்கும்.
..............................

2) ஒருவரது இயல்பை அவரது செயலே உணர்த்தி விடும்.
..............................

3) சந்தர்ப்பம் கிடைக்கும் போது இதனைத் தவறவிடக் கூடாது.
..............................

4) குற்றம் செய்தவர்கள் குற்ற உணர்ச்சியால் துன்புறுவர்.
..............................

5) கோபம் சிந்தனைக்கு இடையூறு.
..............................

(5 × 2 = 10 புள்ளிகள்)

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிலும் சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்க.

i) (1) அறிவுறுத்தல் (2) அரிவுறுத்தல் (3) அறிவுருத்தல்

ii) (1) தொலிழாளி (2) தொளிலாழி (3) தொலிளாழி

(2 × 2 = 04 புள்ளிகள்





kalvi.lk

10. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள கருத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) விளம்பரங்கள் ........................... (கவர்ற்ச்சியாக, கவர்சியாக, கவர்ச்சியாக) அமைய வேண்டும்.

2) நீரைப் பெற்றுக் கொள்வதற்காக ........................... (குளங்கள், குழங்கள், குலங்கள்) பயன்படுத்தப்படும்

3) தாய் குழந்தைக்கு உணவு ........................... (கொடுத்தார், கொடுத்தார்கள், கொடுத்தது)

4) ஆற்றங்கரையில் சிறுவர்கள் மணல் வீடு கட்டி ........................... (விளையாடினார்கள், விழையாடினார்கள், விலையாடினார்கள்)

5) நீங்கள் புத்தகம் ........................... (படித்தீர்களா?, படித்தாயா?, படீத்தீர்களா?)

(5 × 2 = 10 புள்ளிகள்)

. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் அறிவித்தலாயின் (✓) எனவும் அறிவுறுத்தலாயின் (×) எனவும் கட்டளையாயின் ( O ) எனவும் எதிரே உள்ள அடைப்பினுள்ளே அடையாளமிடுக.

1) அலுமாரியில் இரண்டாம் தட்டில் உள்ள கணிதப் புத்தகத்தை எடுத்து வாருங்கள். (   )

2) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்க. (   )

3) நாளை சிரமதானம் நடைபெறும். (   )

4) உங்கள் சுட்டெண்ணை மூன்றாம் பக்கமும் எழுதுங்கள். (   )

5) மைதானத்திற்கு வேகமாகச் செல்லுங்கள். (   )

(5 × 2 = 10 புள்ளிகள்)

“எமது உணவு வேளை கலப்புணவாக அமைவதால் கிடைக்கும் பயன்கள்” என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொல்லுக்குக் குறையாமல் எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியாக இருத்தல் வேண்டும்.

1) ..........................................................................................

..........................................................................................

2) ..........................................................................................

..........................................................................................

3) ..........................................................................................

..........................................................................................

(3 × 2 = 06 புள்ளிகள்)



kalvi.lk